# ஒரு ஏழை விதவை தனக்குள்ள எல்லாவற்றையும் கர்த்தருக்குக் கொடுத்தாள்

**ஜெபம்:** பிதாவே, பிள்ளைகள் சந்தோஷமாகப் பிறருக்கு கொடுப்பதற்கு அவர்களை இந்தப் பாடம் ஊக்கப்படுத்தும் படியாக உபயோகிப்பீராக.



கீழ்வரும் குழந்தைகளுக்கான செயல்பாடுகளில் எதையாகிலும் தேர்ந்துகொள்க.

**லூக்கா 21:1-4** ல் உள்ள ஏழை விதவையின் **கதையை** வாசிக்கவும் அல்லது கூறவும்.

**கதையைக் கூறுவதற்கு முன்னர்,** தேவனுக்கு பிடித்தமாகக் கொடுக்கும் வழிவகைகளை அறிந்து கொள்ள கவனமாக கேட்குமாறு பிள்ளைகளிடம் வேண்டிக் கொள்க. **கதை கூறிய பின் கேட்கவும்:**

- காணிக்கைப் பெட்டியில் ஏழை விதவை போட்டது என்ன?
- தனது வாழ்க்கைக்காக வைத்திருந்ததில் அந்த விதவை எவ்வளவு கொடுத்தாள்?
- அந்த விதவை கொடுத்ததைப் பற்றி இயேசு கூறியது என்ன?
- தேவனுக்கு கொடுப்பதற்காக பணக்காரன் அதிகமாக தியாகம் செய்தானா?
- தேவனுடைய பார்வையில் அதிகமாகக் கொடுத்தது அந்தப் பெண்ணா அல்லது பணக்காரர்களா?

**படம் வரைக:** இரு ரோம நாணயங்கள், அல்லது நாணயம் உள்ள பெட்டி, விதவை, பணக்காரர்கள். சிறுவர்களுக்கு பெரிய குழந்தைகள் உதவி செய்யட்டும்.



- நாம் எவ்வாறு தேவனுக்குக் கொடுக்க வேண்டும் என்பதைப் படம் உணர்த்துகிறது என்பதை விளக்கவும்.
- இந்தப் படத்தை சிறுவர்கள் பார்த்து வரையட்டும் அல்லது தாங்களே தங்கள் சொந்தமானதை வரையட்டும்.

- விதவை கொடுத்தது போல நாம் சுதந்திரமாக, மகிழ்ச்சியாக, தாராளமாக இருதயத்திலிருந்து கொடுக்க வேண்டுமே தவிர வற்புறுத்தலுக்காக கொடுக்கக் கூடாது.
- அடுத்த ஆராதனையின் போது பிள்ளைகள் தங்கள் படத்தைப் பெரியவர்களுக்கு விளக்கவும்.

**நியா. 19:14-21** லிருந்து, தாராள மனம் படைத்த கிபியாவின் கிழவனைப் பற்றிய கதையைக் கூறவும் அல்லது வாசிக்கவும்.

நியா 19:14-21 ல் உள்ள தாராளமான கிழவனின் கதையை **நாடகமாக்கலாம். பெரிய பிள்ளைகள்** நடிக்க வேண்டிய பாகம்:

- **கதை கூறுபவர்:** கதையை வாசித்து சிறுவர்கள் பேச வேண்டியதை ஞாபகப்படுத்தவும்
  - **லேவியன்**
  - **கிழவன்**
- **சிறிய பிள்ளைகள்** நடிக்க வேண்டிய வேடங்கள்
  - **வேலைக்காரன்**
  - **வேலைக்காரி**
  - **கழுதை** (காலும் கையும் ஊன்றி கழுதை போல நடிக்கவும்)
  - **கிபியாவினர்**

**கதை கூறுபவன்:** "தன் வேலைக்காரன் மற்றும் வேலைக்காரியோடு பழைய இஸ்ரவேல் தேசத்தில் பயணம் போன ஒரு லேவியனைப் பற்றிய கதை இது" (நியா. 19:14-21).

**வேலைக்காரன்:** "ஐயா, சூரியன் விழுந்து விட்டது. நாம் மேலும் போக முடியாது!"

**வேலைக்காரி:** "நாம் இந்தப் பட்டிணத்துக்குள் போய், இரவு தங்க இடம் இருக்கிறதா என்று பார்ப்போம்!" (அவர்கள் ஒருபுறம் நடந்து போய் கதவைத் தட்டுவது போல் நடித்தல்).

**கிபியா மனிதன்:** "என்ன வேண்டும்?"

**லேவியன் :** "நாங்கள் பயணம் போகிறோம். இரவு தங்க ஓர் இடம் வேண்டும். தங்க இடம் கொடுங்கள்! பணம் கொடுத்து விடுகிறோம்!"

**கிபியா மனிதன்:** "நான் பயணிகளை என் வீட்டில் தங்க வைப்பதில்லை. பட்டிணத்து நாற்சந்தியில் படுத்து தூங்குங்கள்."

**கதை கூறுபவர்:** அவர்கள் பல வீடுகளில் கேட்டும் ஒருவரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

**லேவியன் :** "வாங்க! நாம் அந்த நாற்சந்தியில் தான் இராத்தங்க வேண்டும். கவனமாக இருக்க வேண்டும். இங்கே இருப்பது ஆபத்தானது." (அவர்கள் சிறிது தூரம் நடந்து உட்காருகின்றனர்).

**கிழவன்** : "எங்கே போகிறீர்கள்? இங்கே தங்குவது ஆபத்து!"

**லேவியன் :** "நாங்கள் எப்பிராயீம் போகிறோம். யாரும் எங்களுக்கு வீட்டில் இடம் தரவில்லை. ஆனால் எங்களிடம் கழுதைகளுக்குப் போதுமான தீவனம் உண்டு. சில அப்பங்களும் பானமும் இருக்கின்றன."

**கிழவன்** : "உங்கள் தேவைகளை எல்லாம் நான் பூர்த்தி செய்வேன். இந்த வெளியில் நீங்கள் இரவைக் கழிக்க வேண்டாம். என் வீட்டுக்கு வாருங்கள். நான் இந்தக் கழுதைகளுக்கும் கொஞ்சம் தானியம் தருவேன்."

**கழுதைகள்** : கனைக்கின்றன. யாவரும் போகிறார்கள்.

**கதை கூறுபவர்:** “அந்தக் கிழவன் கழுதைகளுக்கு உணவு தந்து, அவர்கள் கால்களைக் கழுவி, அப்பமும் பானமும் தருகிறான்.” (உதவியவர்களுக்கும் கேட்ட பெரியவர்களுக்கும் நன்றி கூறுக). சபைத்தலைவரோடு பேசி குழந்தைகள் ஆராதனையில் பங்கு கொள்ள ஏற்பாடு செய்க.

- பிள்ளைகள் கிழவனைப் பற்றிய நாடகத்தைப் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டட்டும்.
- கொடுத்தலுக்கான என்ன நல்ல முன்னுதாரணத்தை இந்த நாடகத்தில் பார்த்தார்கள் என்று பெரியவர்களை குழந்தைகள் கேட்கவும்.
- ஏழை விதவையின் கதையை யாராவது ஒரு பிள்ளை கூறலாம். பகுதி 1 ல் உள்ள கேள்விகளைக் கேட்கவும்.

**சங்கீதம்:** சங். 50:1, 9, 10, 12, 23 வசனங்களை சிறுவர்கள் ஒப்புவிக்கவும்.

இந்த நாடகத்தில் கண்ட கொடுத்தல் பற்றிய நல்ல உதாரணம் என்ன. பிள்ளைகள் பதில் கூறட்டும்.

*(பதில்: கிழவன் அந்நியர்களுக்குக் கூட தாராளமாய்க் கொடுத்தான்). பெரிய பிள்ளைகள் கொடுத்தல் பற்றி கவிதை, பாடல் அல்லது சிறுகதை எழுதட்டும்.)*

**மனன வசனம் :** லூக் 6:38.

**ஜெபம்:** “கர்த்தாவே! இந்த உலகத்தில் உள்ள எல்லாம் உமக்கு உரியவை. நீர் எங்களுக்கு ஏராளமாக கொடுத்திருக்கிறீர். நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். ஏழை விதவையைப் போல நாங்களும் எங்கள் நன்றியைக் காட்டும் வண்ணம் உமக்கு உற்சாகமாகக் கொடுக்க விரும்புகிறோம். இருதயத்தின் ஆழத்தில் இருந்து தாராளமாய்க் கொடுக்க உதவி செய்யும்.”

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net